சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.39/2021

27.02.2026

வா.சா.1 திரு. ரவீந்திர கணேசன், த/பெ. தெட்சிணாமூர்த்தி

**6 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

அசல் வழக்கை நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் டிரஸ்ட்டுக்கு சொந்தமானது என வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது டிரஸ்ட் இல்லாமல் ஜார்ஜ் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் டிரஸ்ட் என்று தாக்கல் செய்யவில்லை. எங்கள் குடும்ப தர்மசொத்து என்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் டிரஸ்ட் சொத்துக்கள் என்பதால் விற்பனை செய்யக்கூடாது என்று நான் கட்சி செய்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் சம்பந்தமான டிரஸ்ட் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சட்டப்படி டிரஸ்ட் பதிவு செய்யப்படவில்லை என்றால் பிராதில் சொல்லியுள்ள கட்சி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதே போல் நான் தனிப்பட்ட முறையில் அசல் வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுப்பையாபண்டாரத்திற்கு ரெகுபதிராவ் வகையறா எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் டிரஸ்ட் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தண்ணீர்பந்தல் குறிப்பிட்ட காலத்திற்கு செய்யப்படவேண்டும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சுப்பையாபண்டாரத்திற்கு அந்த சொத்துக்களை பொறுத்து சகல பாத்தியங்களும் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பையாபண்டாரம் சர்வ பாத்தியத்துடன் அனுபவித்து வந்து தண்ணீர்பந்தல் அமைத்து செயல்படவேண்டும் என்றால் சரிதான். சுப்பையாபண்டாரம் கிரயம் போன்ற ஆவணங்கள் செய்வதை வா.சா.ஆ.1 ஆவணம் தடை செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பையாபண்டாரம் தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் எழுதிவைத்துள்ளாரா என்றால் இல்லை. சுப்பையாபண்டாரத்திற்கு ரெத்தினம் மட்டுமே மகன் ஆவார். சுப்பையாபண்டாரத்தின் சகோதரர் சிங்காரவேல். சிங்காரவேலும், ரெத்தினமும் சேர்ந்து செட்டில்மெண்ட் செய்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரெத்தினத்திற்கு 6 நபர்கள் வாரிசுகள் ஆவார்கள். ஆறுமுகம், கனகசபாபதி, நடராஜன், சுப்பிரமணியன், தெட்சிணாமூர்த்தி, ராஜதுரை ஆவார்கள். ரெத்தினம் பண்டாரம் தாவா சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் எழுதிவைக்காததால் அவரின் வாரிசுகளான மேற்சொன்ன 6 நபர்களுக்கும் சொத்தில்

பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தனது பெரிய மகன் ஆறுமுகம் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். ஆறுமுகம் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்துக்களில் ஆறுமுகத்திற்கு எந்த வகையில் கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் காணாமல் போய்விட்டதால் தாக்கல் செய்யவில்லை. பிராதில் அசல் உயில் காணாமல் போன விவரத்தை ஏன் சொல்லவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் தகவல் சொல்லிவிட்டேன். வா.சா.ஆ.2 ஆவணத்தின் சான்றிட்ட நகலை வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்பு வாங்கினேனா என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை பொறுத்து ஆறுமுகம் உயில் எழுதிவைக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுகத்துடன் பிறந்தவர்கள் 6 நபர்கள் உள்ள நிலையிலும் ஆறுமுகத்தின் வாரிசுகள் உள்ள நிலையிலும் எனது தகப்பனாருக்கு உயில் எழுதிவைத்ததாக சொல்வது எனது தகப்பனார் உயிருடன் இருந்ததால் அவர் பெயருக்கு உயில் எழுதிவைத்தார். ஆறுமுகத்தின் வாரிசுகள் உயிருடன் இருந்த போதும் சகோதரர் தெட்சிணாமூர்த்தி பெயருக்கு உயில் எழுதிவைக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. தெட்சிணாமூர்த்தி தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணம் ஏதேனும் எழுதிவைத்துள்ளாரா என்றால் இல்லை. ஆறுமுகத்தின் மகன்கள் சுப்பையா, ரெத்தினவேல், சுதாகர் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் வாரிசுகள் வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி கிரயம் செய்துக்கொடுத்தது செல்லத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பே ஆறுமுகத்தின் பெண்குழந்தைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் திருமணத்திற்காகதான் சொத்துக்கள் விற்கப்பட்டதாகவும் பெண்களுக்கு திருமணமாகவில்லை என்றும் தன்னிச்சையாக பதில் அளிக்கிறார். பெண்களுக்கு பூர்வீக சொத்தில் 2005 முதல் உரிமை வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை குறை காண சட்டப்படி இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து 1902 ஆம் வருடத்திலிருந்து 1993 ஆம் வருடம் வரை டிரஸ்ட் சம்பந்தமாக ஆவணம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. நாங்கள் தண்ணீர்பந்தல் வைத்து தர்மம் செய்தோம் என்று காட்ட ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கோ எனது தகப்பனாருக்கோ தாவா சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. ஆறுமுகம் பெயரில் உயில் ஏற்பட்டதாக சொல்லும் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சிகையொப்பம் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. ஆறுமுகம் எஸ்எஸ்எல்சி படித்துள்ளார். ஆறுமுகம் இந்திய ரிசர்வ் வங்கியில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு உலக விவரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. உயிலை பதிவு செய்ய பதிவு கட்டணம் யார் செலுத்தியது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது தகப்பனார் தெட்சிணாமூர்த்தி செலுத்தியதாக சொன்னார். எனது சாட்சியத்தின்படி உயில் சந்தேகத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. ஆறுமுகத்தின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதிலும் ஆறுமுகம் எந்த வருடம் இறந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்துள்ள உயில் ஐயப்பாடு உடையது என்றால் சரியல்ல. உயில் மட்டும் தான் எனக்கு அடிப்படை ஆதாரமா என்றால் சரிதான். உயில் ஆவணத்திலும் எனது தகப்பனாருக்கு முழு உரிமை வழங்கப்படவில்லை என்றாலும் அவர் ஆயுட்காலம் வரை மட்டுமே அனுபவம் செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 6 ஆம் பிரதிவாதி கிரயம் பெற்று 31 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை ஆறுமுகத்தின் வாரிசுகள் கிரயம் செய்ய 1985 ஆம் வருடம் முயற்சி செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு தெரிந்து அதுகுறித்து வா.சா.ஆ.7 ஆவணத்தின்படி செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.7 செய்தித்தாளில் தாவா சொத்துக்கள் டிரஸ்ட் சொத்து என்றும் தெட்சிணாமூர்த்தி டிரஸ்ட் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 செய்தித்தாளில் கண்ட சொத்துக்கள் யார் யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டது சம்பந்தமாக எனது தகப்பனார் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரை அவர் உயிருடன் இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா பி அட்டவணை 1, 4 சொத்துக்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதற்கான தொகைகளை யார் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தாவா சொத்துக்கள் முழுவிவரமும் தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் போக இன்று வரை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கியது சம்பந்தமாக நான் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற நிலுவையில் இருப்பதால் நீதிமன்ற செயல்களுக்கு உட்படுமாறு அறிவுறுத்தினார்கள். தஞ்சாவூர் மண்டல துணை பதிவு துறை அலுவலரும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தினார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் டிரஸ்ட்டுக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். 6 ஆம் பிரதிவாதி

பெயரில் பட்டா ஏற்பட்டதை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. 6 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் கட்டி முடித்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் கட்டிடம் கட்டும்போதே தடுத்தோம். 6 ஆம் பிரதிவாதி கட்டிடம் கட்டும் போது தான் அவர் கிரயம் பெற்ற விவரம் தெரியவந்ததா என்றால் ஆமாம். எனவே சொத்தை பொறுத்து முழுவிவரமும் அதற்கு முன்பே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். இந்த வழக்கில் தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் பார்வையிட மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 6 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் கட்டிவிட்டதால் அவருக்கு எதிராக கோரும் தடை உத்தரவு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என கோரும் பரிகாரம் ஏற்புடைதல்ல என்றால் சரியல்ல. 3 ஆண்டுகளுக்கு உள்ளாக அசல் வழக்கை தாக்கல் செய்யாவிட்டால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. சொத்துரிமை சட்டம் பிரிவு 10ன் படி சொத்துக்களை தடை செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அக்கறையாலும், பாராமுகத்தாலும் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உயிலில் உள்ள கைரேகை ஆறுமுகத்துடையது அல்ல என்றாலும் ஆறுமுகம் கையெழுத்து போடக்கூடிய நபர் என்றாலும் எனது தகப்பனாரால் வா.சா.ஆ.2 ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. ஆறுமுகம் 1946ல் எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 1990 ஆம் வருடம் எனது தகப்பனார் தெட்சிணாமூர்த்தி இறந்த நிலையில் அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதாக சொல்லும் உயில் ஆவணத்தின்படி தன்னுடைய பெயரை நிர்வாகி என சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 5 நபர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் மற்ற வாரிசுகள் சேர்ந்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8ல் கண்ட போட்டோக்களில் கட்டிடம் 60 சதவீதம் கட்டிய பின்பு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 6 ஆம் பிரதிவாதிக்கு எதிராக தாவா படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.